# 33

# ஆவியானவரை அறிமுகப்படுத்துதல்

"ஆவி" (*pneuma*) என்ற வார்த்தைக்கான ஆங்கிலச் சொல்லான "Spirit" என்பது - சிலவேளைகளில் சிறிய "s" ஐக் கொண்டுள்ளது, ஆனால் வழக்க மாக இது ஒரு பெரிய "S"ஐயே கொண்டுள்ளது - ரோமர் 8ம் அதிகாரத்தில் இருபதுக்கும் மேற்பட்ட முறைகள் தோன்றுகிறது. இந்த வார்த்தை பெரிய "S" ஐக் கொண்டு உச்சரிக்கப்படும்போது, இது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. ரோமர் 8ம் அதிகாரத்தில் ஆவியானவரும் அவரது கிரியையும் முக்கியத்துவமா யிருப்பதால், ஒரு அறிமுகப்பாடம் முறையானதாயிருக்கிறது.

பலர், பரிசுத்த ஆவியானவர் யார் மற்றும் அவர் என்ன செய்கிறார் என்பது பற்றிய தெளிவான புரிந்துகொள்ளுதல் இல்லாதிருக்கின்றனர். KJV வேதாகமம் "Holy Ghost" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது (ரோமர் 5:5; 9:1; 14:17; 15:13, 16). "Ghost" என்பது, "ஆவி" என்று அர்த்தப்படுகிற ஒரு பழைய ஆங்கில வார்த்தையாக உள்ளது, ஆனால் இன்றைய நாட்களில் "ghost" என்ற வார்த்தை, பயத்தைத் தூண்டுகிற, மாய உருவகங்களை அர்த்தப்படுத்துகிறது. "ஒரு ஆவிக்கு மாம்சமும் எலும்புகளும் இராது" என்பதால் (லூக்கா 24:39), சிலர் "ஆவி" என்ற வார்த்தையை ஒரு முன்னேற்றமாகக் கருதுவது இல்லை. இருப்பினும் "தேவன் ஆவியாயிருக்கிறார்" (யோவான் 4:24) என்பதை மனதில் வையுங்கள். தேவனைப் பற்றிய ஒரு மனக்கருத்தை நீங்கள் கொண்டிருக்கிறீர்களா? அப்படி யென்றால், அந்தப் புலன் உணர்வைப் பரிசுத்த ஆவியானவருக்கு மாற்றுங்கள், அப்போது நீங்கள் உங்கள் புரிந்துகொள்ளுதலில் ஒரு பெரிய தாண்டுதலை ஏற்படுத்துவீர்கள்.

வேதவாக்கியங்களில் பரிசுத்த ஆவியானவருக்குத் தனிச்சிறப்பானதொரு பெயர் தரப்பட்டிருப்பதில்லை என்பது ஒரு பிரச்சனையாக உள்ளது. தேவன் (பிதாவானவர்) பழைய ஏற்பாட்டில் பல்வேறு வகையான பெயர்களால் அறியப் பட்டிருக்கிறார்; இயேசு (குமாரன்) இயேசு, கிறிஸ்து, மற்றும் *Logos* என்று (பிறவற்றினுடன்கூட) அழைக்கப்பட்டிருக்கிறார்; ஆனால் பரிசுத்த ஆவியானவர் விவரிப்பான தனிப்பெயர்களைக் கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளார். "பரிசுத்த ஆவி" என்ற சொற்றொடர்கூட "பரிசுத்தமாக [*hagios*] உள்ள ஆவி" என்று மாத்திரமே அர்த்தப்படுகிறது. இயேசு இந்த பூமிக்கு வருவதற்குமுன் இருந்ததுபோன்று, தேவனும்கூடப் பரிசுத்தமாகவுள்ள ஒரு ஆவியாக இருப்பதால் அந்தச் சொற்றொடரில் தனித்துவம் எதுவும் இருப்பதில்லை. ரோமர் 8ல் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆவி என்றும் கிறிஸ்துவின் ஆவி என்றும் அழைக்கப்படுகிறார், ஆனால் திரும்பவும் இவைகள் வெறும் விவரிப்புச் சொற்றொடர்களாக மாத்திரமே உள்ளன. பரிசுத்த ஆவியானவருக்கு நாம் "ஒரு

*பெயர்" என்று அழைக்கும் விஷயம் ஏன் தரப்படவில்லை என்று நான் அறிவதில்லை. ஒருவேளை இது, அவர் தம்மை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்பதால் இவ்வாறிருக்கலாம். பழைய ஏற்பாட்டில், அவர் பிதாவை வெளிப்படுத்தினார்; புதிய ஏற்பாட்டில் அவர் குமாரனை வெளிப்படுத்தினார். ஒரு கருத்தில், அவர் எப்போதுமே பின்னணியிலிருந்து கிரியை செய்திருக்கிறார்.*

*ஆவியானவரைப் பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும் நாம் அறிய இயலாது, ஆனால் அவரைப் பற்றிய சில விஷயங்களை நாம் அறியமுடியும் - மற்றும் இவைகளே நாம் அறிய வேண்டிய விஷயங்களாக உள்ளன. இந்தச் சுருக்கமான படிப்பில், நான் ஆவியானவரின் சில பண்புகளை உங்களுடன் பகிர்ந்துகொள்வதன்மூலம் அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.*

## அவர் ஒரு நபர்த்துவமாக இருக்கிறார்

*பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர்த்துவமாக இருக்கிறார் என்பதை முதலில் வலியுறுத்த என்னை அனுமதியுங்கள் (உங்கள் சிந்தையில், "நபர்த்துவம்" என்பதில் "நபர்" என்பதை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்). யோவான் 16:13, 14ல் (இரு வசனங்களில் மட்டும்), பரிசுத்த ஆவியானவர் ஒன்பது முறை குறிப்பிடப்பட்டுள்ளார் - ஒவ்வொரு முறையும் நபருக்குரிய சிறப்புப் பெயரைக் கொண்டு அவர் குறிப்பிடப்பட்டுள்ளார், இது ஆணுக்குரிய பெயர்ச்சொல்லாகவும் எண்ணில் ஒருமையுமாக உள்ளது. ஆவியானவர் ஒரு நபராக ஒரு நபர் செய்யக்கூடிய பின்வரும் செயல்களைச் செய்யக்கூடியவராக இருக்கிறார்:*

- *ஆறுதல் படுத்துதல் (யோவான் 14:26).*
- *போதித்தல் (யோவான் 14:26).*
- *சாட்சி கூறுதல் (யோவான் 15:26).*
- *கண்டித்து உணர்த்துதல் (யோவான் 16:8).*
- *வழிநடத்துதல் (யோவான் 16:13).*
- *தடைசெய்தல் (நடபடிகள் 16:6, 7).*
- *சாட்சி கொடுத்தல் (ரோமர் 8:16).*
- *வேண்டுதல் செய்தல் (ரோமர் 8:27).*
- *ஆராய்ந்தறிதல் (1 கொரிந்தியர் 2:10).*
- *பேசுதல் (1 தீமோத்தேயு 4:1).*

*"வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர், மகிமைப்படுத்தப்பட்ட 'அது' என்பதாக ஒருக்காலும் வெளிப்படுத்தப்படாமல், ஒரு தெய்வீக 'அவர்' என்பவராகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளார். அவர் வெறும் செல்வாக்கு என்ற வகையில் அல்ல, அதற்குமாறாக உயிருள்ள, செயல்துடிப்புள்ள தனிநபர் என்ற வகையிலேயே பேசப்பட்டுள்ளார். அவர் மாபெரும் சக்தியைக் கொண்டுள்ளார், ஆனால் அவர் ஒரு சக்தியாக மாத்திரம் இருப்பதில்லை" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: பரிசுத்த ஆவியானவர் சில வழிகளில், உங்களைப் போன்ற ஒரு நபராக இருக்கிறார். நீங்கள் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டீர்கள், அந்த சாயல் பரிசுத்த ஆவியானவரின் சாயலில்*

படைக்கப்பட்டிருத்தலையும் உள்ளடக்குகிறது (ஆதியாகமம் 1:26ல் உள்ள "நமது" என்ற வார்த்தையைக் கவனியுங்கள்). உங்களைப் போன்றே, பரிசுத்த ஆவியானவரும் பின்வருபவற்றைக் கொண்டுள்ளார்:

- ஒரு சிந்தை (ரோமர் 8:27).
- அறிவு (1 கொரிந்தியர் 2:11).
- சித்தம் (1 கொரிந்தியர் 12:11).
- அன்பு போன்ற உணர்வுகள் (ரோமர் 15:32).
- உணர்வுநிலைகள். அவர் எதிர்த்து நிற்கப்பட (7:51), அவருக்கு எதிராகப் பொய்கூறப்பட (நடபடிகள் 5:3), மற்றும் நிந்திக்கப்பட (எபிரெயர் 10:29) முடியும். அவர் தூஷிக்கப்பட முடியும் (மத்தேயு 12:31). அவர் துக்கப்படுத்தப்பட முடியும் (எபேசியர் 4:30).

பரிசுத்த ஆவியானவர் "என்னவிதமாகக் காணப்படுகிறார்" என்று அறிய நாம் விரும்பலாம், ஆனால் அது ஒரு நபரைக்குறித்துப் பழக்கமாவதற்கு மிகவும் முக்கியமான காரணியாக இருப்பதில்லை. ஒரு தனி நபருடைய *இருதயத்தைப்* பற்றி அறிதல் என்பது அவரது *முகத்தைப்* பற்றி அறிதலைவிட அதிகமான விஷயங்களை நமக்குக் கூறுகிறது.

## அவர் ஒரு தெய்வீக நபர்த்துவமாக இருக்கிறார்

பரிசுத்த ஆவியானவர் ஒரு *தெய்வீக* நபர்த்துவமாக இருக்கிறார் என்பதை அடுத்து வலியுறுத்த என்னை அனுமதியுங்கள். அவர் பிதா மற்றும் குமாரனைப் போன்றவராகவே இருக்கிறார். KJV வேதாகமத்தில் "Godhead" என்று அழைக்கப்பட்டுள்ளபடி அவர், "தேவத்துவத்தில்" ஒரு பாகமாக இருக்கிறார் (நடபடிகள் 17:29; ரோமர் 1:20; கொலோசெயர் 2:9). தேவனுக்கும் இயேசுவுக்கும் குறிப்பிடப்படுபவை யாவும் பரிசுத்த ஆவியானவருக்கும் குறிப்பிடப்படுகின்றன: அவர் ஜீவனாக இருக்கிறார் (யோபு 33:4; யோவான் 3:5, 6ஐக் காணவும்); அவர் வெளிச்சமாக (அல்லது ஒளியூட்டுபவராக; 1 கொரிந்தியர் 2:9-11ஐக் காணவும்) இருக்கிறார்; அவர் அன்பாக இருக்கிறார் (ரோமர் 5:3-5; 15:32ஐக் காணவும்). அவரது தெய்வீகப் பண்புகள் சிலவற்றை நாம் கவனிப்போம். அவர் பின்வருமாறு இருப்பதாக விவரிக்கப்பட்டுள்ளார் ...

- நித்தியமானவர் (எபிரெயர் 9:14).
- எல்லாம் அறிந்தவர் (1 கொரிந்தியர் 2:10, 11).
- சர்வ வல்லவர் (வல்லமையும் பரிசுத்த ஆவியானவரும் அடிக்கடி தொடர்புபடுத்தப்படுகின்றனர்) (மீகா 3:8; நடபடிகள் 1:8).
- எங்கும் நிறைந்தவர் (சங்கீதம் 139:7, 8).
- நல்லவர் (நெகேமியா 9:20).


பிதா மற்றும் குமாரன் ஆகியோருடன் இணைந்து பரிசுத்த ஆவியானவர் நம்மைப் படைத்தார் மற்றும் நம்மை ஆசீர்வதிக்கிறார். தேவன் மற்றும் இயேசு ஆகியோர் யாராக இருக்கின்றனர் என்று புரிந்துகொள்வதைவிட பரிசுத்த ஆவியானவர் யாராக இருக்கிறார் என்று புரிந்துகொள்வது கடினமாக

*இருக்கக்கூடாது.*

## அவர் ஒரு தெய்வீக நபர்த்துவமாக இருக்கிறார்: "திரித்துவத்தில்" ஒருவராக இருக்கிறார்

கடைசியாக, பரிசுத்த ஆவியானவர் ஒரு தெய்வீக நபர்த்துவமாக இருக்கிறார் என்பதைக் கவனியுங்கள்: *"திரித்துவத்தில்" ஒருவர்.* "திரித்துவம்" என்பது வேதாகம வார்த்தையல்ல, ஆனால் அது வேதாகமக் கருத்து ஒன்றை அளிக்கிறது. "திரித்துவம்" என்பது "Tri [மூன்று]" கூட்டல் "unity [ஒன்று]" என்பதிலிருந்து வருகிறது. அது "ஒன்றில் மூன்று" என்று அர்த்தப்படுகிறது.

பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவி ஆகியோர் மூன்று தனித்தனி நபர்த்துவமாக உள்ளனர் (மத்தேயு 3:16, 17; யோவான் 14:16, 17; மத்தேயு 28:19; ரோமர் 15:32 மற்றும் 2 கொரிந்தியர் 13:14ஐக் காணவும்).[1] அதே வேளையில், "கர்த்தர் ஒருவராகவே இருக்கிறார்!" (உபாகமம் 6:4; மத்தேயு 28:19ல் "நாமம்" என்பது ஒருமையில் உள்ளது என்பதைக் கவனிக்கவும்). இதற்குப் பூமிக்குரிய வகையில் இணைவு எதுவும் இருப்பதில்லை, ஆனால் சில விஷயங்கள் எவ்வாறு ஒன்றாக இருக்க முடியும் மற்றும் அதேவேளையில் ஒன்றுக்கு மேற்பட்டதாகவும் இருக்க முடியும் என்பதற்குப் பல்வேறு விவரிப்புகள் பயன்படுத்தப்பட்டுடுள்ளன. முக்கோணம் என்பது பயன்படுத்தப்படும் ஒரு விவரிப்பாக உள்ளது: முக்கோணமானது மூன்று பக்கங்களை உடையதாக உள்ளது, ஆனால் அது ஒன்றாகவே உள்ளது.




திருமணம் என்பது சிலவேளைகளில் பயன்படுத்தப்படுகிற இன்னொரு விவரிப்பாக உள்ளது. திருமணத்தில் இருவர் ஒன்றாகின்றனர் (ஆதியாகமம் 2:24; மத்தேயு 19:5, 6; எபேசியர் 5:31). கணவரும் மனைவியும் ஒன்றாகின்றனர், ஆனால் அவர்கள் இரு நபர்களாகவே தொடர்ந்து இருக்கின்றனர்.

தேவத்துவத்தின் மூன்று உறுப்பினர்களும் சாராம்சம் மற்றும் நோக்கம் ஆகியவற்றில் ஒன்றாக உள்ளனர், ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது செய்கையின் வட்டாரத்தைக் கொண்டிருத்தல் என்பது சாத்தியமாகவே உள்ளது. ஒரு எழுத்தாளர், பிதா திட்டமிடுபவராகவும், குமாரன் நிறைவேற்றுபவராகவும், பரிசுத்த ஆவியானவர் ஒழுங்கமைப்பவராகவும் உள்ளனர் என்று கருத்துத் தெரிவித்தார். இன்னொருவர், பிதாவை கட்டிட வடிவமைப்பாளர் என்றும்,

குமாரனைக் கட்டிடம் கட்டுபவர் என்றும் பரிசுத்த ஆவியானவரை நிறைவுப்பணி செய்பவர் என்றும் குறிப்பிட்டார். உதாரணமாக, பௌதீகப் படைப்பில், நிச்சயமாகவே பிதா அதைத் திட்டமிட்டார்; ஆனால் எபிரெயர் 1:2 மற்றும் யோவான் 1:3 ஆகிய வசனங்கள், சகலமும் குமாரனால் படைக்கப்பட்டன என்று போதிக்கின்றன, மற்றும் ஆதியாகமம் 1:2ம் வசனம், ஆவியானவர் ஒழுங்கற்ற முறையிலிருந்து ஒழுங்கமைவைக் கொண்டுவந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கலாம் (சங்கீதம் 104:30ஐக் காணவும்).

"ஆவிக்குரிய சிருஷ்டிப்பை" (ராஜ்யம்/சபை என்பது நிலைநாட்டப்படுதல் மற்றும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதல் என்பதை) பொறுத்தமட்டில், தேவன் அதைத் திட்டமிட்டார் (எபேசியர் 3:10, 11) மற்றும் இயேசு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார் (யோவான் 4:34; 5:19; 8:28; 12:49), ஆனால் பரிசுத்த ஆவியானவர் "நிறுவுதலை" செய்தார் என்று நாம் கூறலாம். அவர் கன்னியிடத்திலிருந்து [இயேசு] பிறத்தல், சிமியோன் மற்றும் அன்னாள் என்பவர்களின் ஏவுதல் பெற்ற கூற்றுகள், யோவான் ஸ்நானனின் ஊழியம், இயேசு அவரது ஞானஸ்நானத்தின்போது அடையாளம் காட்டப்படுதல், இயேசு வனாந்தரத்திற்கு இட்டுச் செல்லப்படுதல், மற்றும் கர்த்தருடைய ஆச்சரியமான ஊழியம் ஆகியவற்றில் செயல் முனைப்புடன் ஈடுபட்டிருந்தார். இயேசுவால் அவருடைய சீஷர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்தார் மற்றும் ராஜ்யத்தை/சபையைத் தொடங்க பெந்தெகொஸ்தே நாளில் வந்தார். பின்பு அவர் அப்போஸ்தலர்களையும், மக்கள் இரட்சிக்கப்படும்படி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் சுவிசேஷ செய்தியைப் பதிவுசெய்யப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களையும் ஏவினார். நமது இரட்சிப்பைப் பொறுத்தமட்டில், தேவன் அதைப் பற்றி நினைத்தார், இயேசு அதைச் செய்தார் மற்றும் பரிசுத்த ஆவியானவர் அதைப் போதித்தார் என்று கூறப்பட்டுள்ளது.

## முடிவுரை

பரலோகத்தில் பரிசுத்தமான மூவரின் பிரசன்னத்தில், நாம் குளிர்காயும் வரையிலும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அதிகமான விஷயங்களை நாம் ஒருபோதும் அறியாதிருக்க நேரிடலாம். இருப்பினும், நம்மால் அறியக்கூடுமானவற்றை நாம் அறியவேண்டும் என்று நான் திரும்பவும் கூறுகிறேன். ரோமர் 8ம் அதிகாரம், இன்றைய நாட்களில் ஆவியானவரைப் பற்றியும் அவரது செயல்பாடு பற்றியும் நாம் அறிய நமக்கு உதவுகிற மதிப்புமிக்க ஆதாரமூலமாக உள்ளது.

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

இந்தப் பிரசங்கத்திற்குப் பின்பு, நீங்கள் மக்களைக் கிறிஸ்துவினிடம் வருமாறு அழைப்பு விடுக்கும்போது, இரட்சிப்பின்மீது பிதாவும் குமாரனும் கொண்டுள்ள அதே ஆர்வத்தைப் பரிசுத்த ஆவியானவரும் கொண்டுள்ளார் என்று குறிப்பிட விரும்பலாம் (வெளிப்படுத்தின விசேஷம் 22:17ஐக் காணவும்). பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெறும்படி பாவிகளை வேண்டிக்கேட்டுக் கொள்ளுங்கள் (மத்தேயு 28:19).

குறிப்பு

[1]*நீங்கள் இந்தப் பாடத்தை, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் வரிசைத் தொடரில் ஒரு பாகமாகப் பயன்படுத்தினால், ரோமர் 8ம் அதிகாரம் தேவத்துவத்தின் மூன்று உறுப்பினர்களையும் குறிக்கிறது என்பதைச் சுட்டிக் காண்பிக்க விரும்பலாம் (வசனங்கள் 9, 11ஐக் காணவும்).*